4. தகவல் கோரல்.

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் குறித்து.

முற்பகல் 11.30

டாக்டர் தே. குமாரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, ...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் குமாரதாஸ் உங்களுடைய பிரச்சினை, அரசின் கவனத்திற்கு மீனவர்கள் காணாமல் போனதுபற்றிக் கொடுத்திருக்கிறீர்கள். அது போன்று கோடிமாரி ஒன்று கொடுத்திருக்கிறார், சிங்காரம் ஒன்று கொடுத்திருக்கிறார், லாரன்ஸ் ஒன்று கொடுத்திருக்கிறார், மத்திய அரசினுடைய கடலோரக் காவல் படைத் துறையினரிடமிருந்து சில செய்திகள் வர வேண்டியிருக்கிறது என்று எனக்குத் தகவல் கொடுத்திருக்கிறார்கள். நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம். (குறுக்கீடு) டாக்டர் குமாரதாஸ் நேற்றுகொடுத்திருக்கிறீர்கள். தயவுசெய்துஉட்காருங்கள். இதுநம்முடையஅரசாங்கம் மட்டும் தகவல் தெரிவிக்கிற விஷயம் அல்ல. மத்திய அரசுத் துறையிடமிருந்து அரசுக்குத் தகவல் வர வேண்டியிருக்கிறது. எனவே அது வந்தவுடன் நாளை எடுத்துக் கொள்ளப்படும். உட்காருங்கள். இன்றைக்கு வேண்டாம்.

குழுவின் அறிக்கைகளை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. பெ. பொன்னுசாமி, பொதுக்கணக்குக் குழுவின் தலைவர்.

டாக்டர் தே. குமாரதாஸ். ** (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அனுமதிக்காமல் நீங்கள் பேசிக் கொண்டே இருக்கக்கூடாது. நான் உங்களுக்குத் தகவல் சொல்லி இருக்கிறேன். மத்திய அரசுத் துறையிடமிருந்து தமிழக அரசுக்குத் தகவல் இன்னும் கிடைக்கவில்லை. எனவே கிடைத்தவுடன் உங்களுக்குத் தகவல் தருகிறோம் என்று எனக்குத் தகவல் தரப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். மற்ற உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். நீங்கள் இப்படிச் செய்வது சரியில்லை. நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். (குறுக்கீடு) இது எல்லாம் அவைக் குறிப்பிலே இருக்காது. (குறுக்கீடு) நானே சொல்கிறேன். அரசுக்கு வந்த தகவல். மத்திய அரசுத் துறையிடமிருந்து எங்களுக்குத் தகவல் இன்னும், முழுமையாக வரவில்லை என்று எனக்குத் தெரிவித்திருக்கிறார்கள். எனவே இதையொட்டி முழுத் தகவலும் தெரிவித்து, அவைக்கு வந்து தெரிவியுங்கள் என்று நான் தெரிவித்திருக்கிறேன். இதையே அமைச்சர் சொல்ல வேண்டுமென்றாலும் சொல்வார். அதை நான் வேண்டாம் என்று நினைக்கிறேன். எனவே உட்காருங்கள் நாளைக்கு இது பற்றி பதில் உங்களுக்கு வரும்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.